# பதிவுத் துறையில் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள்; அண்டை மாநிலங்கள் பாராட்டு!

## சட்டப்பேரவையில் அமைச்சர் பி.மூர்த்தி பெருமிதம்... 4 ஆம் பக்கத் தொடர்ச்சி

விளைவாக, 530.93 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2024-25 ஆம் ஆண்டில், நிலுவைகளை வசூல் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கைகளால், மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி நிலுவையாக 1,680.21 கோடி ரூபாயும், ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரிநிலுவையாக 188.53 கோடி ரூபாயும், முந்தைய சட்டங்களின் நிலுவையாக 124.23 கோடி ரூபாயும் வசூலிக்கப்பட்டன. ஏப்ரல் 2024 முதல் புதியதாக பதிவுபெற்ற வரிசெலுத்துவோருடன் நல்லுறவை வளர்க்கும் விதமாக அவர்களுக்கு வரவேற்பு கடிதங்கள் அனுப்பும் நடைமுறை ஜூலை 2024 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. இப்புதிய நடைமுறைமூலம் முகவரியில் செயல்படாத வரிசெலுத்துவோர் மற்றும் போலி பட்டியல் தயாரிப்போர் அடையாளம் காணப்பட்டு, அவர்களின் பதிவுச்சான்றுகள் இரத்து செய்யப்பட் டுள்ளதுடன், அவர்கள் பெற்ற உள்ளீட்டு வரிவரவினை மீட்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. முகவரியில் செயல்படாத பதிவுபெற்ற நபர்கள் மற்றும் பதிவுபெறாத நபர்களை அடையாளம்காணும்பொருட்டு, ஆகஸ்ட் 2024 முதல் தெருதணிக்கை தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் புதிய வரிசெலுத்துவோர் பதிவு செய்யப்படுவதோடு, அவர்கள் வாயிலாக கூடுதல் வருவாயும் கிடைத்து வருகிறது.

வணிக இடங்களை சரிபார்க்கும் போது தரவுகளைப் பெறுவதற்கு ஏதுவாகவும், தெருத்தணிக்கையை முறையான வகையில் நடத்திடவும், “அரண்” (ARAN) என்ற ஒரு கைபேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது. பதிவு பெற்ற வணிக இடத்தில் உள்ள வரிசெலுத்துவோர், பதிவுபெறாத இடம் அல்லது கூடுதல் இடத்தில் வணிகம் செய்யும் வரிசெலுத்துவோர், தவறான நிர்வாகவரம்பின்கீழ் இணைக்கப்பட்ட வரிசெலுத்துவோர், போலி பட்டியல் தயாரிப்போர் ஆகியோரை அடையாளம் காண இந்த செயலி உதவுகிறது. வரிசெலுத்துவோர் எளிய முறையில் வணிகம் செய்வதை வணிக வரித் துறை ஊக்குவிக்கும்வண்ணம், சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின்கீழ், பதிவுச் சான்று, அறிக்கைகள் தாக்கல் செய்தல், வரி செலுத்துதல், திருப்புத் தொகை பெறுதல் போன்ற வரிசெலுத்துவோர் தொடர்பான பலவகையான வணிக நடவடிக்கைகளை இணைய வழியாகவே மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**வரி செலுத்தும் முறை!**

வரி செலுத்தும் முறையினை எளிதாக்கும் வண்ணம், ஒன்றிணைந்த கட்டண இடைமுகம் (UPI) மற்றும் பற்று/வரவு அட்டைகள்மூலம் சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை செலுத்தும் முறை 7-11-2024 முதல் தொடங்கப்பட்டுள்ளது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையத்தின் பின்புல அலுவலக மென்பொருள் பயன்பாடு மாதிரி2 அமைப்பினை 2022 ஆம் ஆண்டில் வணிகவரித் துறை ஏற்றுக் கொண்டுள்ளது. மேலும், வருவாய் வசூலை மேம்படுத்திடவும், துறையின் அலுவலர்களுக்கு உதவிடவும், தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் (ELCOT) மற்றும் தமிழ்நாடு மின்ஆளுமை முகமையின் துணையுடன் முழுமையான தீர்வு திட்டம் 2.0 செயல்படுத்தப்பட்டுள்ளது. தற்போது, துறை அலுவலர்களின் பணித் திறனை கண்காணிக்கும் பொருட்டு, ஐதராபாத்தில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் மென்பொருள் தொகுப்புகளால் உருவாக்கப்படுகின்ற பல்வேறு மேம்படுத்தப்பட்ட மேலாண்மை தகவல் அறிக்கைகள், முழுமையான தீர்வு திட்டம் 2.0வில் உட்புகுத்தப்பட்டுள்ளது.

வணிகர்களிடம் கனிவான அணுகுமுறையைக் கடைபிடித்து, அவர்களின் பல்வேறு குறைகளுக்குத் தீர்வு கண்டு, மேன்மையான வரி நிர்வாகத்தை உறுதி செய்வதையே தலையாய கொள்கையாக கொண்டுள்ள வணிகவரித் துறை 2025-2026 ஆம் ஆண்டிலும், வணிகர் நலனை கருத்தில் கொண்டு, அரசுக்கு வருவாயை ஈட்டுவதிலும் உரிய பங்களிப்பை தந்து சிறப்பாக செயல்படும் என்ற உறுதியை இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறோம். வணிகவரித் துறையில் பல்வேறு புதிய நடவடிக்கைகளை முன்னெடுத்து துறையின் வருவாய் பெருக்கத்திற்காக பெரிதும் உறுதுணையாக இருக்கும் எங்கள் வணிகவரித் துறை ஆணையர் முனைவர் டி.ஜகந்நாதன் IAS அவர்களுக்கும், துறையின் உயர் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பதிவுத்துறை!**

பத்திரப் பதிவுத் துறையானது, அரசுக்கு வரும் மொத்த வருவாயில் 15.4 சதவிகிதத்தை அளித்து, வருவாய் ஈட்டும் துறைகளில் இரண்டாம் இடத்தில் உள்ளது என்பதை அனைவரும் அறிவோம். திராவிட மாடல் ஆட்சியில் மக்களின் போற்றதலுக்குரிய நமது முதலமைச்சர் அவர்களால் அனைத்து மக்களும் பயன்பெறும்வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இந்தத் திட்டங்களுக்கு தேவையான நிதியை அளிப்பதில் பதிவுத் துறையும் தனது பங்கினை அளித்து வருகிறது.

கழக அரசு பொறுப்பேற்ற போது, 2020-2021 ஆம் நிதியாண்டில் 10 ஆயிரத்து 643 கோடி ரூபாயாக இருந்த பதிவு துறையின் வருவாய் தற்போது இரண்டு மடங்கிற்கு மேல் அதிகரித்து, இந்த நிதியாண்டில் 21 ஆயிரத்து 968 கோடி ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கூடுதல் வருவாய்!**

இவ்வாறு கழக அரசு பொறுப்பேற்ற பின்பு, நான்காண்டுகளில் பதிவுத் துறையில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் வாயிலாக இக்கூடுதல் வருவாய் வசூலிக்கப்பட்டுள்ளது. மாநிலத்திற்கு வருவாய்பெற்றுத்தருவதில் இரண்டாவது துறையாக உள்ள பதிவுத் துறையின் நிர்வாக செலவினமானது, 2024-2025 ஆம் நிதியாண்டில் துறையின் மொத்த வருவாயில் 2 சதவிகிதமாகவே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ‘ஏழை எளிய மக்களுக்கு பதிவுத் துறையின் சேவைகள் தாமதமின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்’ என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கியதற்கு இணங்க, அதனை நிறைவேற்றிட பதிவுத் துறையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், அவர்கள் பொருளாதாரத்தில் தன்னிறைவை அடைவதற்காகவும் இந்த அரசால் ஏராளமான திட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்த திராவிட மாடல் ஆட்சியானது அனைத்து மக்களுக்கும் நன்மை தரும் ஆட்சியாக இருந்தாலும், குறிப்பாக பெண்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் ஆட்சியாக அமைந்துள்ளது என்பதை அனைவரும் அறிவார்கள். இந்த வரிசையில் பத்திரப் பதிவுத் துறையில் மகளிருக்கான முத்திரைத் திட்டமாக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது, பெண்கள் பெயரில் பதிவு செய்யப்படும் ரூபாய் 10 லட்சம் வரை மதிப்புள்ள வீடுகள், மனைகள் மற்றும் விவசாய நிலங்கள் உள்ளிட்ட அனைத்து அசையா சொத்துக்களுக்கும், பதிவுக் கட்டணம் 1 சதவீதம் குறைக்கப்படும் என்பது ஆகும். பெண்களுக்கு சொத்தில் உரிமை உண்டு என்று சட்டம் கொண்டு வந்து நடைமுறைப்படுத்தியவர், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.

**பெண்களுக்கு பதிவுக் கட்டணத்தில் சலுகை!**

அவ்வாறு பெண்கள் சொத்துரிமை பெற்றால், அந்த சொத்துக்கு பதிவுக் கட்டணத்தில் சலுகை என்று அறிவித்து மகளிரை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி இருக்கிறார், நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அதனால்தான் தமிழ்நாட்டின் பெண்கள் அவரை அப்பாவாகவும், சகோதரராகவும் பார்க்கிறார்கள்.

> **கழக அரசு பொறுப்பேற்ற பின்னர் கடந்த 4 ஆண்டுகளில் வணிக வரித் துறையும், பதிவுத் துறையும் சேர்ந்து மொத்தமாக 5 லட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாய் வருவாயை ஈட்டி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளன. இவ்விரு துறைகளால் வசூலிக்கப்படும் இந்த வருவாயின் பங்களிப்பானது, தமிழ்நாடு அரசு புதுமையான பல திட்டங்களை செயல்படுத்தி, மாநிலத்தின் உட்கட்டமைப்பை மேம்படுத்தவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும் ஆதாரமாக உள்ளது.**

## புதிய பத்திரப் பதிவு அலுவலகங்கள் – பதிவுத் துறையின் அடிப்படை உள் கட்டமைப்புகளுக்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு!

பணிப்பளு மிகுந்த அலுவலகங்களை பிரிக்கும் பொருட்டு சார்பதிவாளர் அலுவலகங்களின் எல்லைகள் சீரமைக்கப்பட்டு கடந்த நிதி ஆண்டில் மட்டும் தஞ்சாவூர் பதிவு மாவட்டம் அம்மாபேட்டை, விருதுநகர் பதிவு மாவட்டம் எம்.ரெட்டிபட்டி, சேலம் மேற்கு பதிவு மாவட்டம் காடையாம்பட்டி, கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம் பாகலூர் மற்றும் திருவள்ளூர் பதிவு மாவட்டம் எண்2 இணை சார்பதிவாளர் அலுவலகம் என இதுவரை 5 புதிய அலுவலகங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

வடசென்னை பதிவு மாவட்டம் கொளத்தூர், திருப்பூர் பதிவு மாவட்டம் பொங்கலூர், தாம்பரம் பதிவு மாவட்டம் வண்டலூர், தென்சென்னை பதிவு மாவட்டம் சோழிங்கநல்லூர், கோவை தெற்கு பதிவு மாவட்டம் கருமத்தம்பட்டி, செங்கல்பட்டு பதிவு மாவட்டம் நாவலூர் மற்றும் கேளம்பாக்கம் என 7 புதிய அலுவலகங்கள் தொடங்கப்பட்டு, விரைவில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வர உள்ளன.

பொதுமக்கள் எளிதில் அணுகும்வகையில் அவர்களின் வசதிக்காக அந்தந்த சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குள்ளேயே அலுவலக கட்டடம் அமையும் வகையில் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான கழக அரசு பொறுப்பேற்றது முதல் இதுநாள் வரை 128 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 43 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, தற்போது பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன.

3 அலுவலகங்களுக்கு கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு திறப்பதற்கு தயார் நிலையில் உள்ளன. 48 அலுவலகங்களுக்கான கட்டுமானப் பணிகள் தற்போது பல்வேறு நிலையில் நடைபெற்று வருகின்றன. 12 அலுவலகங்களுக்கான பணி ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன. 22 அலுவலகங்களுக்கான பணி தொடக்க நிலையில் உள்ளன. பதிவுத் துறைக்கு சொந்தமான 160 ஆண்டுகள் பழமை வாய்ந்த புராதன கட்டடம் ஒன்று சென்னை ஜார்ஜ் டவுனில் அமைந்துள்ளது. இந்தக் கட்டடம் 1864 ஆம் ஆண்டு இந்தோ சராசனிக் கட்டடகலை நயத்துடன் கட்டப்பட்ட வரலாற்று சிறப்புமிக்கதாகும். வலுவிழுந்த நிலையில் இருந்த இந்த புராதனக் கட்டடத்தை பழமை மாறாமல் ரூபாய் 9.85 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி 10-3-2025 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதில், சென்னை வடக்கு மாவட்டப் பதிவாளர் அலுவலகம், மாவட்டப் பதிவாளர் தணிக்கை அலுவலகம், வடசென்னை எண் 1 இணை பதிவாளர் அலுவலகம், உதவி செயற்பொறியாளர் அலுவலகம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

**நவீன வசதிகள்!**

பதிவுக்கு வரும் பொதுமக்களுக்கு தேவையான வசதிகள் மற்றும் சேவைகள் அளிக்கும்வகையில் அடையாறு சார்பதிவாளர் அலுவலகம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதில் பொதுமக்கள் அமருவதற்கு வசதியாக குளிரூட்டப்பட்ட அறை, சிறந்த இருக்கை வசதி, wifi வசதி போன்ற நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதுபோன்ற வசதிகள் இந்த வருடம் 66 சார்பதிவாளர் அலுவலகங்களில் ஏற்படுத்துவதற்கும், 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான கட்டடங்கள் மற்றும் வாடகைப் கட்டடங்களில் செயல்பட்டுவரும் பதிவு அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், அதிக ஆவணங்கள் பதிவாகும் சார்பதிவாளர் அலுவலகங்களின் பணிப் பளுவைப் குறைத்து, பொதுமக்களுக்கு விரைவான சேவையை அளிக்கும்வகையில் தென் சென்னை பதிவு மாவட்டம் குன்றத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தை மூன்றாக பிரித்தும், கோவை வடக்கு பதிவு மாவட்டம் பெரிய நாயக்கன்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தை இரண்டாகர் பிரித்தும், (குறுக்கீடு) உறுப்பினர் உங்களுடையதா! நீங்கள் கேட்டது கிடைத்துவிட்டது. தருமபுரி பதிவு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி, திருவண்ணாமலை பதிவு மாவட்டம், ஜமுனாமரத்தூர் (குறுக்கீடு) (உறுப்பினர் உங்கள் ஊரையும் சொல்லிவிட்டேன். ஜமுனாமரத்தூர் மற்றும் கள்ளக்குறிச்சி பதிவு மாவட்டம் வாணாபுரம் ஆகிய இடங்களில் புதிய அலுவலகங்களை உருவாக்கவும், மேலும், பதிவுத் துறைக்குத் தேவையான அடிப்படை உள்கட்டமைப்புகளை வழங்குவதற்கு இந்த நிதியாண்டில் பதிவுத் துறைக்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கப்படும். மேலும், திண்டுக்கல் பதிவு மாவட்டம் கொடைக்கானல் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பாச்சலூர் கிராமத்தினைப் பிரித்து பழனி பதிவு மாவட்டம், சத்திரப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

வருவாய் ஈட்டுவதில் எவ்வளவு கவனம் செலுத்துகிறதோ அதே அளவு பொதுமக்களுக்கான சேவைகளை வழங்குவதிலும் பதிவுத் துறை கவனம் செலுத்தி வருகிறது. பதிவு செய்த நாளன்றே ஆவணங்கள் பொதுமக்களுக்கு திரும்ப வழங்கப்படுகின்றன.

சென்ற நிதியாண்டில் பதிவான ஆவணங்களில் 89 சதவிகிதம் பதிவான நாளன்றே பொதுமக்களுக்கு திரும்ப வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் பதிவுமுறை மிகச் சிறப்பாக இருப்பதால் பிற மாநிலங்களின் பதிவுத் துறையில் இருந்து நமது மாநிலத்திற்கு வந்து பார்ப்பது வழக்கமாகி உள்ளது.

அந்த வகையில் இந்த வருடமும் மகாராஷ்டிரா, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், தெலுங்கானா மற்றும் சத்திஸ்கர் ஆகிய மாநிலங்களில் இருந்து நமது மாநிலத்தின் பதிவுத் துறை நடைமுறைகளைப் பார்த்துவிட்டு, குறிப்பாக, தமிழ்நாட்டிலுள்ள வில்லங்கச் சான்றிதழ் வழங்கும் முறையை வெகுவாக பாராட்டிச் சென்றுள்ளனர் என்ற செய்தியை இங்கு பதிவிட விரும்புகிறேன்.

இவ்வாறாக, பதிவுத் துறையில் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு துறையின் வருவாய் பெருக்கத்திற்கு பெரிதும் உறுதுணையாக இருக்கும் பதிவுத் துறையினுடைய தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் IAS அவர்களுக்கும், துறையின் உயர் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட மாடல் ஆட்சியானது தமிழ்நாட்டுக்கான ஆட்சி மட்டுமல்ல, இந்தியாவிற்கே முன்மாதிரியான ஆட்சியாக நடத்திக்கொண்டிருக்கும் முதலமைச்சர் அவர்களின் கனவை நிறை வேற்றும் துறையாக வணிக வரி மற்றும் பதிவுத் துறை செயல்பட்டு வருகிறது. கடந்த 20242025 ஆம் நிதியாண்டில் வருவாய் ஈட்டியதைப் போன்று வணிகவரித் துறை மற்றும் பதிவுத் துறை இனி வருங்காலங்களிலும் முந்தைய ஆண்டுகளைவிட கூடுதல் வருவாயைப் பெற்றுத் தரும் என்பதை மீண்டும் ஆணித்தரமாக பதிவு செய்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.மூர்த்தி பதிலுரை வழங்கினார்.

### காட்பாடி இரயில் நிலையத்தில்

# நடைமேடையில் தானியங்கிப் படிக்கட்டுகள் அமைக்க வேண்டும்!

## டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. வலியுறுத்தல்!

சென்னை, ஏப்.25-

தென்னக இரயில்வேயின் சென்னை கோட்டத்திற்கு உட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான வருடாந்திர ஆலோசனைக்கூட்டம் தென்னக இரயில்வே பொதுமேலாளர் ஆர்.என். சிங் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேலூர் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட இரயில் நிலையங்களில் மேற்கொள்ள வேண்டிய உட்கட்டமைப்பு வசதிகள், இரயில் நிறுத்தங்கள் மற்றும் காட்பாடி இரயில் நிலைய மேம்பாலப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. வைத்த கோரிக்கையின் விவரங்கள் பின்வருமாறு:

வாணியம்பாடி நியூடவுன் LC81 சுரங்கப்பாலத்திற்கான கட்டுமானப்பணிகளைப் பற்றி கேள்வி எழுப்பிய போது போர்க்கால அடிப்படையில் 6 மாதத்திற்குள் முடிக்கப்படும் என்று இரயில்வே நிர்வாகம் உறுதி அளித்துள்ளது.

ஆம்பூர் இரயில் நிலையத்தில் இரண்டு நுழைவு வாயில்கள் இருந்தாலும் ஒன்று பயன்பாட்டில் இல்லாததால் அந்த வாயிலை பயன்படுத்துவதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளவேண்டும்.

ஆம்பூர் இரயில் நிலையத்தில் இரவு நேர பயணிகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் ஆம்பூர் ரயில்வே நிலைய வளாகத்தில் உயர் மின் விளக்கு நிறுவப்படவேண்டும்.

ஆம்பூர், வாணியம்பாடி மற்றும் குடியாத்தம் இரயில் நிலைய உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும்.

ஆம்பூர், வாணியம்பாடி மற்றும் குடியாத்தம் இரயில் நிலையங்களில் கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்ட இரயில்கள் மீண்டும் இயக்கப்படும் விவரங்கள் மற்றும் புதிய இரயில்வே நிறுத்தங்களுடன் புதுப்பிக்கப்பட்ட அட்டவணை பகிரப்பட வேண்டும்.



காட்பாடி இரயில் நிலைய புனரமைப்புப்பணிகளில் ரூ. 353 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு, தொய்வு நிலை ஏற்பட்டுள்ளதால் பணிகளை துரிதப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினேன். எனது கோரிக்கை ஏற்கப்பட்டு 1 ஆண்டுக்குள்ளாக பணிகள் முடிக்கப்படும் என்று இரயில்வே நிர்வாகம் உறுதி அளித்துள்ளது.

காட்பாடி புதிய இரயில்வே மேம்பாலம் அமைப்பதற்கு இரயில்வே நிர்வாகம் ஏன் அனுமதி அளிக்கவில்லை என்று கேள்வி எழுப்பியதற்கிணங்க, பாலத்திற்கான கட்டுமானப்பணிகளுக்கு தடையில்லா சான்றிதழ் வழங்க நிர்வாகம் ஒப்புதல் அளிக்கப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

காட்பாடி பள்ளிக்குப்பம் வழித்தடத்தில் சுரங்கப் பாலம் அமைக்கவேண்டும் என்ற கோரிக்கையை பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

காட்பாடி இரயில் நிலையத்தில் உள்ள நடைமேடையில் தானியங்கி படிக்கட்டுகள் (Escalator) அமைத்தல் மற்றும் இயக்கவியல் கண்காணிப்பாளர் நியமிக்கப்பட வேண்டும்.

காட்பாடி இரயில் நிலையத்தில் உள்ள கழிப்பிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர்களை கழிவுநீர் தொட்டி மூலம் அகற்றப்படவேண்டும் என்ற கோரிக்கை பற்றி ஆய்வு மேற்கொண்டு நிவர்த்தி செய்யப்படும் என்று இரயில்வே நிர்வாகம் உறுதி அளித்துள்ளது.

இரயில்வே துறை அதிகாரிகள் இரயில் நிலையத்தில் ஆய்வு மேற்கொள்ளும் காலங்களில் உள்ளூர் மக்கள் பிரதிநிதிகளுக்கு தகவல் அளிக்கப்பட்டு அவர்களது மேற்பார்வையுடன் இணைந்து ஆய்வு நடைப் பெறவேண்டும்.

சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் முகப்பு வாயிலில் வாகன நிறுத்துமிடத்தில் தடுப்பான்களை நகர்த்தி மக்கள் செல்லவேண்டி உள்ளதால் அந்த இடத்தில் இரயில் நிலைய ஊழியர்கள் அல்லது CRPF இராணுவ வீரர்களை நியமித்து கண்காணிக்க வேண்டும்.


சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில் இயக்கப்படும் பேட்டரி வாகனம் இயக்கும்போது மக்கள் பார்வைக்கு புலப்படாததால் Blinker எனப்படும் ஒளி உமிழ்ப்பான்களை வாகனங்களில் பொருத்தவேண்டும்.

சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் இரயில்கள் அட்டவணை பற்றிய மின்னணு அறிவிப்பு பலகையில் ஒரே நேரத்தில் விளம்பரங்கள் வெளியிடப்படுவது பயணிகளுக்கு மிகவும் சிரமம் ஏற்படுத்துவதால் ஒளிபரப்பப்படும் நேரம் கணக்கிடப்பட்டு வெவ்வேறு நேரங்களில் இரயில் நிறுத்த கால அட்டவணை ஒளிபரப்பவேண்டும்.

இரயில்வே தண்டவாளத்தில் பயணிகள் பிளாஸ்டிக் மற்றும் இதர கழிவுகளை நவீன உயர்ரக வாக்யூம் கிளீனர் (Vaccum Cleaner) பயன்படுத்தி அகற்றிட வேண்டும்.

இவ்வாறு டி.எம்.கதிர் ஆனந்த் கோரிக்கைகளை முன்வைத்தார்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; ஒரே நாடு, ஒரே தேர்தல்; ஒரே நாடு, ஒரே மொழி; ஒரே நாடு, ஒரே மதம்; ஒரே நாடு, ஒரே பண்பாடு; ஒரே நாடு, ஒரே உடை ; என்பனவற்றை அடுத்து, அதே மாதிரி, ஒன்றிய பா.ஜ.க.வினர் எதைக் குறிப்பிடுவார்கள் ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; “ ஒரே நீதிமன்றம், ஒரே தீர்ப்பு ! எனச் சொன்னாலும் சொல்வார்கள்” என்று இதழ் ஒன்றில் ‘கலாய்த்திருக்கிறார்களே’!**